7 ஆம் பக்கம் தொடர்ச்சி

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஜெ.சாமுவேல், ராம்சந்த், கோத்தகிரி, நீலகிரி. (2) செ.வெங்கடேஷ், கிருஷ்ணாபுதூர், கோத்தகிரி, நீலகிரி. (3) ஜெ.ஜேம்ஸ், மிசின் காம்பவுண்ட், கோத்தகிரி, நீலகிரி. (4) தா.வினோத்குமார், கேர்பன், நியாங் (அ), கோத்தகிரி, நீலகிரி.

## அதிகரட்டி பேரூர்

**அமைப்பாளர் :** ச.தீனதயாளன், 166/06, முட்டிநாடு, அதிகரட்டி, நீலகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.மணிகண்டன், 5/94, செல்விப் நகர், அதிகரட்டி, நீலகிரி. (2) து.கலையரசன், 110, கிளிஞ்சடா, நீலகிரி. (3) த.தாமரை கண்ணன், சேமந்தாடா, கொல்லிமலை (அ), நீலகிரி. (4) ச.சந்திரகுமார், 18, கிளிஞ்சடா, நீலகிரி.

## பிக்கட்டி பேரூர்

**அமைப்பாளர் :** த.சுரேஷ்குமார், 491, சிவசக்தி நகர், பிக்கட்டி, நீலகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.பாரதிராஜா, கவுண்டம்பாளையம், எடக்காடு, நீலகிரி. (2) பி.எஸ்.மணி, சிவசக்தி நகர், பிக்கட்டி (அ), நீலகிரி. (3) மு.சச்சின், சிவசக்தி நகர், பிக்கட்டி (அ), நீலகிரி.

## கேத்தி பேரூர்

**அமைப்பாளர் :** நீ.மணிகண்டன், சோகத்துறை, கேத்தி (அ), நீலகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சு.கிஷோர், தேனலை, சோகத்துறை (அ), நீலகிரி. (2) பி.சஞ்சய், 8/142–ஏ–2, கேத்தி (அ), நீலகிரி. (3) சு.கௌதம், கேத்தி சாட்கட், கேத்தி (அ), நீலகிரி. (4) பி.மைக் அகுவினாஷ், சாந்துார், கேத்தி (அ), நீலகிரி.

## ஜகதளா பேரூர்

**அமைப்பாளர் :** கா.செபஸ்டின், 5/63, கோபாலபுரம், அருவங்காடு, நீலகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கு.பிரதீப்குமார், 1/35, அண்ணா நகர், பெட்டட்டி, ஜகதளா, எடப்பள்ளி, நீலகிரி. (2) இ.ரஞ்சித்குமார், ஜகதளா, நீலகிரி. (3) ர.கார்த்திக், 1/184, கட்டபெட்டு ஹட்டி, கட்டபெட்டு (அ), நீலகிரி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 24–04–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

### பழனி நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகள்!

# விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!



சென்னை, ஏப்.25-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், பழனி நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகள் கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசிய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, "இத்திட்டத்தை விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்!" என்று குறிப்பிட்டார்.

இதுதொடர்பான விவாதம் வருமாறு :-

**ஐ.பி.செந்தில்குமார்:** கோடைகால நீர்த்தேக்கம் என்பது பழனி நகரின் ஒட்டுமொத்த மக்களுடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாகும். அந்தக் கட்டமைப்பு பல்லாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டதாகும்.

அதை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடத்திலும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், மாநில நிதி ஆணையம் ஊக்கத்தொகை திட்டம் 2023-2024-ன்படி, கோடைகால நீர்த்தேக்கத்திலுள்ள குடிநீர்த் தொட்டி கட்டமைப்பு அமைத்தல், valves அமைப்பது, chambers அமைப்பது போன்ற பணிகளுக்காக சுமார் 8.78 கோடி ரூபாயும், 8,160 மீட்டர் தொலைவிலுள்ள 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிக்கு, பழைய குழாய்களையெல்லாம் மறுசீரமைப்பு செய்து புதிய குழாய்கள் அமைப்பதற்கு 9.80 கோடி ரூபாயும் என மொத்தம் கிட்டத்தட்ட 18 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 2-12-2023 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணி தொடங்கப்பட்டு, தற்போது கோடைகால நீர்த்தேக்கத் தொட்டி பணிகள் முடிவுற்று, தற்போது valves மற்றும் chambers அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று, 8,160 மீட்டர் தொலைவிற்கு 450 mm dia DI pipe அமைக்கிற பணியில், கிட்டத்தட்ட 7,360 மீட்டர் பைப்லைன் அமைக்கிற பணி முடிவுற்றிருக்கிறது. வெறும் 800 மீட்டர்தான் பைப்லைன் அமைக்க வேண்டிய சூழல் இருக்கிறது. அது கிரிவலப் பாதையில் இருக்கக்கூடிய பகுதியில் அமைக்கக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

பழனி பாலதண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணி திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் அந்த மீதமுள்ள 800 மீட்டர் பைப்லைன் அமைக்கின்ற பணியை மேற்கொள்ள முற்பட்டபோது, இரண்டு நிர்வாகத்திற்குமிடையே ஒரு முரண்பாடு ஏற்பட்டதையடுத்து, 14-3-2025 அன்றும் மற்றும் 19-3-2025 அன்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, கோட்டாட்சியர், துணைக் கண்காணிப்பாளர், மதுரை மண்டல நகராட்சி நிர்வாகத்தினுடைய செயற்பொறியாளர், பழனி நகராட்சி ஆணையர், செயற்பொறியாளர், திருக்கோயில் நிர்வாகத்தினுடைய இணை ஆணையர் நேர்முக உதவியாளர் உள்ளிட்டோர் தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்தது.

அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் பங்குனி உத்திரத் திருவிழா முடிந்ததற்குப் பிறகு மேற்கண்ட பணிகளைத் தொடரலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். பங்குனி உத்திரத் திருவிழா முடிந்துவிட்டது. அந்தப் பணிகளை விரைந்து முடித்து, மக்களுக்கு குடிநீர் சேவையை வழங்க நகராட்சி நிர்வாகத் துறையின் அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**அமைச்சர் கே.என்.நேரு:** ஐ.பி.செந்தில்குமார், நான் என்ன பதில் சொல்ல நினைத்தேனோ, அதனை முழுவதுமாக அவரே சொல்லிவிட்டார். அங்கே எல்லா பணிகளும் முடிந்துவிட்டன. எனவே, உறுப்பினர்கள் சின்னதுரையாக இருந்தாலும், நாகைமாலியாக இருந்தாலும் அனைவருக்கும் சம்பிரதாயத்திற்காக நான் இப்போது படிக்கிறேன். முழுமையான விவரங்களை உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் சொல்லிவிட்டார்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகராட்சி 6.63 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 33 வார்டுகளும் கொண்ட 70,465 மக்கள் தொகை கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். நகராட்சியின் குடிநீர் ஆதாரங்களாக பாலாறு அணை மற்றும் கோடைகால நீர்த்தேக்கம் மூலம் 8.50 MLD குடிநீர் பெறப்பட்டு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 95 லிட்டர் வீதம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் மாநில நிதி ஆணைய ஊக்கத்தொகை 2023-24 ஆம் ஆண்டு குடிநீர் மேம்பாட்டு பணிகளாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 8.78 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி 9.80 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி 57 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 3 பணிகளும் 19.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் 8 கிலோ மீட்டர் நீளத்திற்கு எடுக்கப்பட்டு, இதில் 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிரிவலப் பாதை மற்றும் அதையொட்டியுள்ள அணுகுசாலைகளில் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், தற்போது பங்குனி உத்திரத் திருவிழா முடிந்துவிட்ட நிலையில், இப்பணிகள் விரைந்து துவக்கி, முடிக்கப்பட வுள்ளது. இதர பணிகளான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தமிழ்நாடு அரசின் 2025 –2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை ஆகிய துறைகளின் சார்பில் மானியக் கோரிக்கை நடைபெறவுள்ளதையொட்டி, நேற்று (24.04.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

---

### கல்வியை மட்டுமே குறிக்கோளாக கொள்ளுங்கள்

# உங்கள் வாழ்வை வளமாக்க திராவிட நாயகரின் அரசு இருக்கிறது!

### பூண்டி.கலைவாணன் பங்கேற்ற விழாவில் மாணவிகளுக்கு டி.ஆர்.பி.ராஜா அறிவுரை!

திருவாரூர்,ஏப். 25-

"மாணவிகள் தங்களின் கல்வியை மட்டுமே குறிக்கோளாக கொண்டு படித்தால் அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றிட தமிழ்நாடு முதலவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு இருக்கிறது" என பூண்டி. கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்ற விழாவில் , மாணவிகளுக்கு ஊக்கம் கொடுத்து தமிழ்நாடு அரசின் தொழில் முதலீடு , மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவுரை கூறினார்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில் சட்டமன்ற உறுப்பினரும் ,மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவருமான பூண்டி கே.கலைவாணன் தலைமையில் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீடு , மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பேசினர்.

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தமது உரையில் "இதே பள்ளியில் படித்து இதே பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரியும் திருமதி பூந்தமிழ்பாவை அவர்களின் உணர்வுமிக்க பணி மிகவும் பாராட்டும் சிறப்பும் மிக்கது, அதனால் மாணவிகளுக்கு வெளியில் இருந்து வந்து நாங்கள் அறிவுரை வழங்கவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். அதே போல இந்த பள்ளியின் பெற்றோர் - ஆசிரியர் சங்க தலைவர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் சொல்வதை கடைப்பிடித்தாலே நீங்கள் வெற்றிபெருவீர்கள்.

தொடர்ந்து 38ஆண்டுகளாக இந்த பள்ளியில் முதலிடம் மாணவிகளுக்கு பூண்டி கே.கலைவாணன் அவர்களால் தங்க காசு பரிசளிக்கப்பட்டு வருகிறது , அதனால் மாவட்டத்திலேயும் முதலிடம் பிடிக்கும் அளவுக்கு மாணவிகள் உயர்ந்து இருக்கிறீர்கள், இனி மாநிலத்தில் முதல் இடம் பிடிக்கும் மாணவிக்கு 5பவுன் தங்க சங்கிலி தரப்படும் என மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் அறிவித்து இருக்கிறார். இனி வரும் வருடங்களில் கண்டிப்பாக மாநில அளவில் வெற்றி பெறுவீர்கள்.

முதல்வர் நமது மண்ணின் மைந்தர் தளபதி அவர்களின் ஆட்சி, உங்களுக்கு குறிப்பாக பெண்களின் வாழ்வில் வளம் கூட்டும் ஒரு ஆட்சி , நீங்கள் உங்கள் சொந்த காலில் நிற்கும் வீராங்கனைகளாக உங்களை உருவாக்கும் ஆட்சி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி. அதற்கு நீங்கள் படிப்பதை மட்டுமே உங்கள் குறிக்கோளாக கொள்ளுங்கள். அதுதான் உங்கள் வாழ்நாள் முழுவதும் கூடவே இருக்கும். நீங்கள் படித்துவிட்டு வாருங்கள் உங்கள் எதிர்காலத்தை திராவிட மாடல் ஆட்சி வளமாக்கும்.

இந்த சிறப்பான பள்ளியில் ஏற்கனவே படித்துவிட்டு வேலைவாய்ப்புக்கு காத்திருக்கும் மாணவிகளுக்கான வாய்ப்பையும் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடு நாங்கள் உருவாக்கி தருகிறோம். செல்போன் பயன்பாட்டை சரியாக பயன்படுத்தி கல்வியில் கவனம் செலுத்துங்கள் என்று குறிப்பிட்டு பேசினார்.

இந்த விழாவில் தலைமை ஆசிரியர் பூந்தமிழ்பாவை , ஒன்றியக்குழு முன்னாள் துணை தலைவர் ஆர். பாலச்சந்திரன், பூண்டி. கே.கலைவேந்தன், பேரூராட்சி தலைவர் கலைச்செல்வி செல்வகுமார், கல்வித்துறை அதிகாரிகள், இருபால் ஆசிரியப்பெருமக்கள், பெற்றோர்கள் மாணவிகள் பங்கேற்றனர்.

---



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், வள்ளியரச்சல் ஊராட்சி, தென்னங்கரைப்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குட்டப்பாளையம் மாந்தபுரம் சாலை முதல் தென்னங்கரைப்பாளையம் சாலை வரையிலும் தார்ச் சாலை மேம்படுத்தும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி மற்றும் மாவட்டச் செயலாளர், இல.பத்மநாபன், ராசி கே.ஆர்.முத்துக்குமார், கே. சந்திரசேகரன், சபரி எஸ்.முருகானந்தம், செண்பகம் பாலு, ஆதவன் ப.ஜெகதீஷ், ரமேஷ் உள்பட பலர் உள்ளனர்.

---

### 'நான் முதல்வன்' திட்டம் மூலம் யு.பி.எஸ்.சி. தேர்வுகளில் தமிழ்நாடு மாணவர்கள் சாதனை!

# ஒட்டுமொத்த தமிழ்நாடும் பெரும் மகிழ்ச்சியில் திளைக்கிறது!

### சட்டப்பேரவையில் - ஐ.பி.செந்தில்குமார் பெருமிதம்!

சென்னை, ஏப்.25–

சட்டப்பேரவையில், நேற்று முன்தினம், "பழனி நகராட்சி குடிநீர்த் திட்டப்பணிகள்" தொடர்பாக தாம் கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் மீதான விவாதத்தில் பேசிய பழனி தொகுதி கழக உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் "நமது முதல்வர் அவர்களின் மகத்தான திட்டங்களில் ஒன்றான 'நான் முதல்வன்' திட்டம் மூலம், யு.பி.எஸ்.சி. தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் பெற்றுள்ள பெரு வெற்றியால், ஒட்டுமொத்த தமிழ்நாடும் மகிழ்ச்சியில் திளைக்கிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



சட்டப்பேரவையில், பழனி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், பழனி நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

விவர அறிக்கைக் குறித்து பேசுவதற்கு முன்பு ஒரு செய்தியை இந்த அவையின் முன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

நேற்று வெளியான UPSC தேர்வு முடிவுகளில், நம்முடைய திராவிட மாடல் நாயகர், மக்கள் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுடைய மகத்தான திட்டங்களில் ஒன்றான நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 134 பேர் பயிற்சி பெற்றதில், அதில் 50 பேர் தேர்ச்சி பெற்றிருப்பதாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே தேசிய அளவில் 23 ஆவது இடத்தை தமிழ்நாடு பிடித்திருக்கிறது. தமிழ் வழியில் படித்த காமராஜ், அதேபோல சங்கரபாண்டியன்ராஜ் மதுரையைச் சேர்ந்தவர்.

இன்றைக்கு அதில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய செய்தியைப் பார்த்த பொழுது, ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் பெரும் மகிழ்ச்சியில் திளைத்து நிற்கக்கூடிய சூழலில், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மகிழ்ச்சியையும் இந்த அவையோடு இணைந்து பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) கடன் திட்டம் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் முன்னிலையில், டாம்கோ தலைவர் சி.பெர்னாண்டஸ் ரத்தின ராஜா தலைமையில் நேற்று முன்தினம் (23.04.2025) புதன்கிழமை அன்று நடைபெற்றது, இதில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் உடன் கலந்து கொண்டார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர கழக அலுவலகம் கட்டும் பணியினை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ் .ஆர். சிவலிங்கம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, சின்னதுரை, பாலசுப்பிரமணியன் , டாக்டர் செழியன், வேல்முருகன், ஏ.ஏ. ஆறுமுகம், ஸ்டாலின், சம்பத்குமார், கிஷோர் ,பர்கத் அலி, மாணிக்கம், சூப் வேல்முருகன், ராமச்சந்திரன், நிர்மலா பபிதா, அலெக்சாண்டர், சசிகுமார், வளையமாதேவி வரதராஜன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.